1973 ஆகஸ்ட் 6]

கட்டடங்கள் விரிவாக்கப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக இந்தச் சிறப்பு வகுப்புகள் (Special class room) அறைக்குக் கட்டடம் கட்டுகின்ற திட்டங்கள் 1974-75 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. அதனுடைய விரிவான பரிசீலனைக்குப் பின்னர் பொருளாதார நிலைமைக்கு ஏற்ப அது அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படும்.

சுண்ணாம்புக்குளம் கிராமத்திற்கு தாய்-சேய் நல விடுதி

*33 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், சுண்ணாம்புக்குளம் கிராமத்தில் தாய்-சேய் நல விடுதி அமைப்பதில் ஏற்படும் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையரிடமிருந்து 1-3-1973 நாளிட்ட மடல் மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் துறை இயக்குநருக்குக் கிடைத்தது. அதில் 20-8-1972 நாளிட்ட செங்கை மாவட்ட குடும்பநலத் திட்டம் மற்றும் மகப்பேறு, குழந்தை நல விடுதி அதிகாரிக்கு ஆணையர் அனுப்பிய விண்ணப்பத்தின்படி நகல் ஒன்று இணைந்திருந்தது. அதன் பேரில் 10-வது மகப்பேறு குழந்தை நல விடுதி சுண்ணாம்புக்குளம் கிராமத்தில் ஏற்படுத்த மக்கள் நல்வாழ்வுத் துறை, குடும்பநலத் துறை இயக்குநர் 12-3-1973 அன்று அனுமதி வழங்கி உள்ளார்.

திரு. கா. வேழவேந்தன் : இப்படி சுண்ணாம்புக்குளம் கிராமத்தில் துவக்கப்படுகின்ற மகப்பேறு, தாய்-சேய் நல விடுதிக்காக நன்றி சொல்லுகின்ற நேரத்தில், அதற்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதனுடைய முதல் பொறுப்பு ஒன்றியத்திற்கு உரியது. அதற்கு கட்டடம் கட்டுவதற்கு அவர்களால் கட்டப்பட வேண்டிய

3, 4 கட்டடங்கள் கட்டியதற்குப் பின்னர் மற்றவைகளுடைய செலவை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த முறையில் முறைப்படி செலவை அரசு ஏற்றுக்கொள்ளும்.

Tuberculosis Sanatorium in Thanjavur.

* 34 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state the details of improvements effected at the Mahatma Gandhi Tuberculosis Sanatorium at Thanjavur during the calendar years 1971 and 1972?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு இரத்த சேமிப்பு நிலையம் 1971-ல் தொடங்கப்பட்டது. 20 படுக்கைகள் கொண்ட, அறுவை சிகிச்சைக்குப் பின்னர் சிகிச்சை பெறுகிற ஒரு பகுதியும் கட்டப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS: May I know the steps taken in other districts in this regard?

THE HON. THIRU K. ANBAZHAGAN: The question is mainly concerned with Mahatma Gandhi Tuberculosis Sanatorium at Thanjavur and the answer will be only relevant to that.

தாம்பரம் க்ஷய நோய் நலன்பேண் மருத்துவ மனை.

*35 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் க்ஷய நோய் மருத்துவ மனையில், நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் உணவு வகை என்னென்ன?

(இ) அதன் அளவினை மேலும் அதிகப்படுத்தும் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) விடை@ ஒன்று அவையினுடைய மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ளது.

@ 390–391-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.